(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 13(13).]

# பாராளுமன்றம்

## 13 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 ஏப்பிறல் 21 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2015 மே 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4787/ ' 14

கௌரவ அசோக் அபேசிங்க,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யுத்தத்தை முடிவுறுத்துவதில் பொலிஸ் உத்தியோகத்தர்களும், பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரும் இணைந்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இவர்களை படை வீரர்களாக ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) படை வீரர்களை ஊக்குவிப்பதற்காக நடத்தப்படும் “ரணவிரு ரியல் ஸ்டார்” போட்டித் தொடரில் பொலிஸ் உத்தியோகத்தர்களை பங்கேற்கச் செய்யாமைக்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4987/ '14

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013 ஆம் ஆண்டில் க.பொ.த. ( சாதாரண தர ) பரீட்சையை நடாத்துவதற்காக,

(i) தாபிக்கப்பட்ட நிலையங்கள்;

(ii) அந்த நிலையங்களின் இணைப்பாக்கத்திற்காக இயங்கிய இணைப்பாக்க நிலையங்கள்;

(iii) சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பரீட்சை நிலைய அதிபர்கள்;

(iv) ஈடுபடுத்தப்பட்ட ஆசிரியர்கள்;

(v) ஈடுபடுத்தப்பட்ட மண்டப அலுவலக உதவியாளர்கள்

எண்ணிக்கை எவ்வளவென்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி (அ) (v) இல் குறிப்பிடப்பட்ட மண்டப அலுவலக உதவியாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதை வெவ்வேறாக அவர் சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே பெயர்கள் குறிப்பிடப்பட்ட மண்டப அலுவலக உதவியாளர்களில் கல்வித்துறை சார்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அத்துறை சாராத ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி பரீட்சையின் பணிகளுக்காக வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மண்டப அலுவலக உதவியாளர்களின் வேதனம் மற்றும் படிகளுக்காக செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) கல்வித்துறை கல்விசாரா ஊழியர்கள் இருக்கின்றவேளையில் வெளியாட்களைப் பரீட்சை அலுவல்களில் ஈடுபடுத்துவதால் அந்த ஊழியர்களுக்கு கொடுப்பனவொன்றை பெற்றுக்கொள்வதற்காக உள்ள வாய்ப்பு அற்றுப்போவதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

5436/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சியப் முனையத்திற்கு சொந்தமான முத்துராஜவெல தாங்கித் தொகுதிக்காக இறக்குமதி செய்யப்பட்ட டீசலின் கந்தக சதவீதம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கம்பஹா மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் விற்பனைக்குள்ள லங்கா ஒடோ டீசல் மற்றும் சுப்பர் டீசலிலுள்ள கந்தக சதவீதம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) கம்பஹா மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு லங்கா ஒடோ டீசல் மற்றும் சுப்பர் டீசல் எந்த பெற்றோலியக் களஞ்சிய முனையத்திலிருந்து வழங்கப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5845/ '14

கௌரவ மொஹமட் அஸ்லம்,— பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொழும்பு மாநகரசபை ஆளுகைப் பிரதேசத்தில், இலக்கம் 32, குப்பியாவத்தை மேற்கு பிரிவுக்குரிய, ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல மாவத்தையில், ஆதனவரி இலக்கம் 108 மற்றும் 108/20 ஆகிய இடங்களின் புகுமுக வழிகளுக்கு தடையேற்படும் விதத்தில், நகர பொது மலசலகூடத் தொகுதியின் மீது அத்துமீறிய நிர்மாணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) கொழும்பு மாநகர சபையின் ஒரு சில உத்தியோகத்தர்களின் அனுசரணையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி அத்துமீறிய நிர்மாணிப்பு காரணமாக பொது மலசலகூடத் தொகுதி தனியார் சொத்தொன்றாக மாறியுள்ளதால், மேற்படி நிர்மாணிப்பை தாமதமின்றி அகற்ற நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5919/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலேமே,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த சனாதிபதித் தேர்தலின்போது சீனத் துறைமுகம், கண்டி வீதி, சமணல மாவத்தை, இலக்கம் 49/1, எனும் இடத்தில் செயற்பட்ட பதிவு செய்யப்பட்ட தேர்தல்கள் நடவடிக்கைகளுக்கான அலுவலகமொன்றில் சொந்தப் பணத்தில் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த வெள்ள நிவாரணமாக விநியோகிக்கப்பட்டு எஞ்சிய சில கையிருப்புப் பொருட்கள் பொலிஸ் குழுவொன்றால் நீதிமன்றக் கட்டளையொன்றின் அடிப்படையில் முத்திரை வைக்கப்பட்டு, வழக்கு நடவடிக்கை தொடரப்பட்டது எக்காரணத்திற்காகவென்பதையும் அது யாருடைய முறைப்பாட்டுக்கு, யாருடைய கட்டளைக்கு அமைவாக என்பதையும் அவர் தனித்தனியாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) முத்திரையிடப்பட்டுள்ள மேற்படி பொருட்களில் அதிகமானவை நாளாந்த நுகர்வுப் பொருட்களாகும் என்பதால் அவற்றுக்கு ஏற்படக்கூடிய சேதம் தொடர்பாக பொலிஸ் திணைக்களம் பொறுப்புக்கூறுமா என்பதையும்;

(ii) மேற்படி சம்பவம் நடைபெற்ற தினத்திலேயே குறித்த அலுவலக வளவில் இருந்த முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குச் சொந்தமான WP PA 4549 இலக்கமுடைய டபிள் கெப் வண்டி அதன் சாரதியினால் மீண்டும் சேவை நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படும்போது கைப்பற்றப்பட்ட அடிப்படை யாது மற்றும் மேற்படி முறைப்பாட்டினை முன்வைத்தவர் யார் என்பதையும்;

(iii) மேலே குறிப்பிட்டவாறான தான்தோன்றித்தனமான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5922/ '15

கௌரவ விதுர விக்கிரமநாயக்க,— பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹொரண பிரதேச செயலாளர் பிரிவில், ஹொரண, ஹேகல்ல தொடக்கம் லபுகம சந்தி வரையிலான வீதி, ஹொரண சவ்கஸ் சந்தி தொடக்கம் குடா உடுவ வரையிலான தல்கஹவில வீதி, ஹொரண, குலுபன தொடக்கம் ஒலபொடுவ வரையிலான மவ்கம வீதி மற்றும் ஹொரண, ஓவிட்டியாகல ஹேன்கந்த ஊடான உடுவ வீதி ஆகிய வீதிகளில் வீதியின் விளிம்புப் பகுதியை உடைப்பதற்கு மேல்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகாரம் வழங்கப்படாமையினால், இப்பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்காக அங்கீகாரமளிப்பட்டுள்ள தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பிரதேச மக்களுக்கு குடிநீரை பெற்றுக்கொடுக்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக காபட் இடப்பட்டு ஐந்து வருடங்கள் கடந்துள்ள மேற்படி வீதிகளுக்கு குறைந்தபட்ச சேதம் ஏற்படுகின்ற வகையில், இவ்வீதிகளின் விளிம்புப் பகுதியை உடைப்பதற்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5931/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வீடமைப்பு, சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த மாத்தறை மாவட்ட மக்களுக்கு வழங்கிய வீடுகளுக்கு தற்போது உறுதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அத்தகைய உறுதிகள் வழங்கப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவில் கந்தகொடல்ல (H.H.O. வீடுகள்), அபிமன்புர மற்றும் திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், மெதவத்த (லுனுகளப்புவ) முதியன்சேவத்த மற்றும் மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் கால்லகே வத்த, துடாவ, கொடிகார கட்டிடம் மற்றும் லொரண்ட் சிட்டி ஆகிய இடங்களில் வழங்கப்பட்டுள்ள வீடுகளுக்கு சுயாதீனமான ஆதனங்களாக அல்லது தனி வீடுகளாக உறுதிகளை வழங்க முடியுமென தேசிய வீடமைப்பு அதிகாரசபை சிபாரிசு செய்துள்ளதா என்பதையும்;

(iv) அந்த வீடுகளுக்கு உறுதிகளை வழங்கும் கடமையை கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைக்கு வழங்குவதற்காக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) கூட்டாட்சி ஆதனங்கள் என்ற அடிப்படையில் அல்லது தனி வீட்டுரிமை என்ற அடிப்படையில் மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட வீடுகளைப் பெற்றவர்களுக்கு உறுதிகள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5939/ '15

கௌரவ வாசுதேவ நாணயக்கார,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கௌரவ ஷிராணி திலகவர்தன உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் நியமிக்கப்பட்ட ஆயுத கடத்தல் பற்றி விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவினால் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவ்வறிக்கை வெளியிடப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனின், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4999/ '14

கௌரவ புத்திக பத்திரண,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் முறையே ரூபா 15000/=, ரூபா 5000/= மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் தலைமை கணக்காளர்களுக்கு ரூபா 3000/= என்றவாறு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுமென்ற 2014 வரவு செலவு திட்ட முன்மொழிவு தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், மேற்படி கொடுப்பனவு வழங்குதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாவட்ட செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள திட்டமிடல் பணிப்பாளர்களுக்கும் தலைமைக் கணக்காளர்களுக்கும் குறைந்த பெறுமதியான ஊக்குவிப்புக் கொடுப்பனவை செலுத்துவதற்கு முன்மொழியப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(ii) குறைந்த கொடுப்பனவொன்றை செலுத்தத் தீர்மானித்தமையினால் மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களின் சேவை குறை மதிப்பீட்டுக்கு உள்ளாகியுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(iii) ஆமெனில், இவர்களது ஊக்குவிப்புக் கொடுப்பனவை அதிகரிக்கச்செய்ய நடவடிக்கை எடுப்பாரா;

(iv) அவ்வாறு அதிகரிக்கப்படும் அளவு எவ்வளவு;

(v) மேற்படி அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5224/ ’14

கௌரவ அசோக் அபேசிங்க,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் அமைந்துள்ள சேரி வீடுகள் மற்றும் லயன் அறைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மாவட்டத்தில் உள்ள வீடுகளற்ற குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குருணாகல் மாவட்டத்தில் மலசலகூடங்கள் இல்லாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மலசலகூடங்கள் இல்லாத வீடுகளுக்கு மலசலகூடங்களை வழங்கும் முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5920/ ’15

கௌரவ சுசந்த புஞ்சி நிலமே,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், உரிமப்பத்திரம் பெற்று மற்றும் உரிமப்பத்திரமின்றி யானைகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களை தேடிச் சென்று கைது செய்தல்களை மேற்கொண்டு குறிப்பிட்ட உரிமப்பத்திரங்களின் துல்லியத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் முன்னர் இந்த விடயங்களை அவதூறு ஏற்படுத்தக்கூடியவாறு பிரபல ஊடகங்கள் மூலம் பகிரங்கப்படுத்தும் வேலைத்திட்டமொன்று உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கைது செய்யப்பட்ட உரிமப்பத்திரங்கள் உள்ள யானைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி உரிமப்பத்திரங்கள் உடையவர்களின் பெயர்கள், முகவரிகள், மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) குறிப்பிட்ட கால எல்லைக்குள் கைதுசெய்யப்பட்ட உரிமப்பத்திரங்களற்ற யானைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி உரிமப்பத்திரங்களற்ற யானைகளை தடுத்து வைத்திருந்தவர்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்;

(v) கைதுசெய்யப்பட்டுள்ள யானைகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(vi) அவற்றின் சுகாதார நிலைமை யாதென்பதையும்;

(vii) சட்ட ரீதியாக மீள ஒப்படைக்கப்பட வேண்டிய யானைகள் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்

(viii) ஆமெனில், அவை மீள ஒப்படைக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5932/ ’15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகங்களிலும் சேவையாற்றுகின்ற கலாசார அலுவலர்கள் மற்றும் கலாசார அபிவிருத்தி உதவியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அரச சேவையின் ஏனைய அலுவலர்களுக்கு உரித்தாகின்ற பதவி உயர்வுகள் மேற்படி தரப்பினருக்கும் ஏற்புடையதாகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், பதவி உயர்வுகள் அளிப்பதற்கு ஏற்புடையதான சேவை நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அலுவலர்களுக்கு பதவி உயர்வுகள் அளிக்கப்படல் ஏற்புடையதாகாதெனில், இவர்கள் ஓய்வு பெறும் போது வகிக்கின்ற பதவி தற்போது வகிக்கின்ற அதே பதவியாக அமையுமா என்பதையும்;

(v) மேற்படி அலுலர்களுக்கு பதவி உயர்வுகளை அளிப்பதற்கு ஏற்புடைய அமைச்சரவை அங்கீகாரம் இதற்கு முன்னர் கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி அங்கீகாரத்தை செயற்படுத்தாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) 6/2006 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் கீழ் உதவி கலாசார அலுவலர் பதவிகள் தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5225/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்கு உள்நாட்டு வங்கிகள் மூலம் நிதி வழங்கப்படுகின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக நிதி வழங்கியுள்ள உள்நாட்டு வங்கிகள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு வங்கியினாலும் வழங்கப்பட்டுள்ள நிதித் தொகை மற்றும் நிதி வழங்கப்பட்டுள்ள நெடுஞ்சாலைக் கருத்திட்டங்கள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) வங்கிகள் வழங்கிய நிதியை திருப்பி வங்கிகள் பெற்றுக் கொள்வதற்கான முறையியல் யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5722/ '14

கௌரவ புத்திக பதிரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அகுரஸ்ஸ, ஹுலன்தாவ தோட்டத்தைச் சார்ந்து வாழ்கின்ற மக்களுக்கு ஆகக்குறைந்த அடிப்படை வசதிகள் கூட இல்லை என்பதையும்;

(ii) இதன் காரணத்தினால் இம்மக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஹுலன்தாவ தோட்டத்தைச் சார்ந்து வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான குடிநீர், வீதி வசதிகள், வீடமைப்பு மற்றும் சுகாதார வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

(iii) இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) இதற்கென செலவுசெய்ய எதிர்பார்க்கப்படும் பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5927/ '15

கௌரவ சுசந்த புஞ்சி நிலமே,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பதவி ஸ்ரீபுர பிரதேச செயலாளர் பிரிவின் எல்லையில், குச்சவெலி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள, தென்னமரவாடி கிராம அலுவலர் பிரிவிலும் அதனை அண்டிய பிரதேசங்களான தொரங்காடு, 2 ஆம் கட்டை, 4ஆம் கட்டை, தோரமரிப்பு, பொரவெவ, குல்லகல்லிய, நேலும்வெவ ஆகிய கிராமங்களிலும் பதவிய திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்டிருந்த பழைய ஆட்சியுரிமை கொண்டிருந்தவர்களுக்கும் புதிய உரிமையாளர்களுக்குமிடையில் காணிப் பிணக்கொன்று உருவாகியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து பழைய ஆட்சியுரிமை கொண்டிருந்தவர்கள் உயிர்ப்பாதுகாப்புக்காக வெளியேறியதன் பின்பு, இக்காணிகளுக்கு அளிப்புப் பத்திரங்களை (LDO) வழங்கி புதிதாக ஒரு குழுவினரை குடியேற்றியவர்கள் யாவர் என்பதையும்;

(ii) இவ்வாறு குடியேறியவர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவை என்பதையும்;

(iii) வருடாந்த உரிமப்பத்திரத்தின் கீழ் இக்காணிகளில் குடியிருந்த பழைய ஆட்சியுரிமை கொண்டிருந்தோர் யாவர் என்பதையும்;

(iv) இவர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி காணிகளுக்கான சட்டபூர்வமான உரிமை, பதவிய திட்டத்தின் கீழிருந்த ஆரம்ப ஆட்சியுரிமை கொண்டவர்களுக்காக இன்றேல் அளிப்புப்பத்திரங்கள் மூலம் பின்பு குடியமர்த்தப்பட்டவர்களுக்கா உள்ளதென்பதையும்;

(ii) இப்பிணக்கைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்னவென்பதையும்;

(iii) இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

---

## 2015 மே 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4788/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆண்டொன்றில் சிறு போகம், பெரும் போகம் ஆகிய இரு போகங்களிலும் பயிரிடுவதற்கு தேவைப்படும் விதை நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விதை நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) தேவைப்படும் விதை நெல்லை உற்பத்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) விதை உற்பத்தியை பெருக்குவதற்கு விதைக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5141/ ’14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மின்சார சபையின் சேவைக்காக மனிதவலு வழங்குகின்ற நிறுவனங்களினூடாக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கால எல்லை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டினுள் இலங்கை மின்சார சபையின் சேவைக்கு நேரடியாகவே ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வூழியர்கள் ஆட்சேர்க்கப்படுகின்றபோது அனுபவமிக்க சேவைக் காலமுள்ள மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) 2014 ஆம் ஆண்டில் ஆட்சேர்க்கப்பட்ட மொத்த ஊழியர்கள் எண்ணிக்கையில் (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர் களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5708/ ’14

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 தயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக 2011 ஜன செவன பத்து இலட்சம் வீடுகள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நடவடிக்கையின் கீழ் மொனறாகலை மாவட்டத்தினுள் வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இனங்காணப்பட்ட மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் வீடமைப்பு வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) குறிப்பிட்ட பணத்தொகை பெறப்பட்ட முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஜன செவன பத்து இலட்சம் வீடுகள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நடவடிக்கையின் கீழ் வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு இனங்காணப்பட்ட குடும்பங்களுக்கு எழுத்துமூல வாக்குறுதியொன்று வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட வாக்குறுதியின்படி இற்றைவரை வீடுகள் கிடைக்காதுள்ள குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5723/ ’14

கௌரவ புத்திக பதிரண,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உல்லாசப் பிரயாண வீசா பெற்று இலங்கைக்கு வந்து சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்துகொண்டு பலவித மதப்பிரசாரங்களில் ஈடுபடுகின்ற பலவித தொழில்களிலும் தொழில் முயற்சிகளிலும் ஈடுபடுகின்ற மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளுடன் தொடர்புபடுகின்ற உல்லாசப் பிரயாணிகள் எத்தனை பேர் 2014 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் எந்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதையும்;

(iii) கைது செய்யப்பட்ட இந்த ஒவ்வொரு நபரினாலும் மேற்கொள்ளப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகள் மற்றும் வழங்கப்பட்ட தண்டனைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உல்லாசப் பிரயாண வீசாவில் வந்து சட்டவிரோதமாக நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களை கைது செய்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்று அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவர்கள் தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்ட வசதிகளைக் கடுமையாக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அது எவ்வாறு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5928/ ’15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின், புல்மோட்டையில் அமைந்துள்ள, அசிரிமலே ஆசிரிகந்த புராதன ரஜமஹா விஹாரைக்குச் சொந்தமான காணிகள் உட்பட புனிதமான ஆதனங்கள் பல்வேறு இனத்தவர்களின் அத்துமீறிய பிடியில் சிக்கியுள்ளதால் மேற்படி விஹாரைக்குச் சொந்தமான காணிகளை பழைய எல்லை நிர்ணையிப்புகளுக்கேற்ப நில அளவை செய்து சட்ட ரீதியாக ஒதுக்கிக் கொடுக்கும் திகதி யாதென்பதையும்;

(ii) எத்தா நெகி கந்த விஹாரை, யான்ஓய ரஜமஹா விஹாரை, நாகலென ரஜமஹா விஹாரை மற்றும் வேறு புராதன விஹரைகளும் அத்துமீறி குடியிருப்பவர்களினதும் பௌத்த உரிமைகளை அழிக்கின்றவர்களினதும் பிடியில் சிக்கியுள்ளதால் மேற்படி விஹாரைகளுக்குச் சொந்தமான காணிகளின் நில அளவைப் பணிகளை மேற்கொண்டு ஒதுக்கிக் கொடுக்கும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி விஹாரைகளுக்குச் சொந்தமான காணிகள் என்பதை அறியாமல் அக்காணிகளில் குடியிருக்கின்ற குடும்பங்களுக்கு வேறு பிரசேத்திலிருந்து காணிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விஹாரைக்கும் சொந்தமான காணிகளிலிருந்து வெளியேற்றப்பட வேண்டுமென ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குடியிருப்பவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6019/ '15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புலம்பெயர்ந்து வேறொரு நாட்டில் வாழும் இலங்கையர்கள் மீண்டும் இந்நாட்டிற்கு திரும்பி வரும்போது கைதுசெய்யப்படுகின்றனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கைதுசெய்தல் எந்த சட்ட ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது என்பதையும்;

(iii) அவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள ஆட்கள் பற்றிய விபரங்களை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி ஆட்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6035/ '15

கௌரவ ரஞ்சித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நாளொன்றினுள் இடம்பெறும் சிசு பிறப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சிசுக்கள் அனைவருக்கும் ரூபா 20,000.00 கொடுப்பனவு பெற்றுக்கொடுக்கப்படுமா என்பதையும்;

(iii) இதற்கென வருடாந்தம் செலவாகும் மொத்த நிதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மேற்படி கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) ஒதுக்கப்பட்டுள்ள இந் நிதி குறித்த கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்கு போதுமானதா என்பதையும்;

(iii) இன்றேல், போதுமான நிதியை ஒதுக்கிக் கொடுக்கும் முறை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6046/ ’15

கௌரவ விஜித ஹேரத்,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் அதன் தாபக நம்பிக்கைப் பொறுப்பாளர், வர்த்தக அமைச்சர் என்பதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) வர்த்தகம் சார்ந்த விடயத்திற்குப் பொறுப்பான தற்போதைய அமைச்சர் யாரென்பதையும்;

(ii) மஹபொல உயர் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் தவிசாளர்கள் யாவரென்பதையும்;

(iii) அந்நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமிப்பவர் யாரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் கீழ் இயங்கும் வரையறுக்கப்பட்ட நஷனல் வெல்த் கோர்ப்பரேஷன் மற்றும் வரையறுக்கப்பட்ட நெற்வேர்த் செக்கியூரிட்டீஸ் நிறுவனங்களின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களை நியமிப்பவர் யாரென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அப்பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் வயது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4793/ ’14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள முழுமொத்த பட்டதாரிகளில் வெளிவாரிப் பட்டதாரிகளின் எண்ணிக்கை மற்றும் உள்வாரிப் பட்டதாரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் ஓர் ஆண்டினுள் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) க.பொ.த (உயர் தர) பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுதல் வரை எடுக்கும் கால எல்லை யாதென்பதையும்;

(iv) தற்போது மேற்படி கால எல்லை ஓராண்டுக்கும் மேலான கால எல்லையாக மாறியுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(v) இந்த நிலைமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) க.பொ.த (உயர் தர) பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் மிக விரைவாக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான ஏதேனும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5754/ '14

கௌரவ புத்திக பதிரண,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) போகம்பர சிறைச்சாலையிலிருந்து கைதிகள் அப்புறப்படுத்தப்பட்ட பின்பு அதனைத் துப்புரவு செய்வதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(ii) இந்நிதியைப் பெற்றுக்கொண்ட மூலம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) போகம்பர சிறைச்சாலை தற்போது எவ்வாறானதொரு அலுவலுக்காக பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(ii) அதன் உரிமை தனியார் நிறுவனமொன்றுக்கு அல்லது தனிநபர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நிறுவனத்தின் அல்லது நபரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5929/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை – கொட்பே கடற்றொழில் துறைமுகத்தில் அமைந்துள்ள பெருமளவு வருமானத்தை ஈட்டக்கூடிய சிற்றுண்டிச்சாலை மிகக் குறைந்ததொரு தொகைக்கு வழங்கப்பட்டமையினால் அரசிற்கு கிடைக்கவேண்டியிருந்த உண்மையான வருமானம் இழக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் யாதென்பதையும்;

(ii) 2015.03.05 ஆம் திகதி மேற்படி கேள்விப்பத்திரம் பெறுனருக்கும் இலங்கை கடற்றொழில் துறைமுக கூட்டுத்தாபனத்திற்குமிடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் ஊடாக மேற்படி சிற்றுண்டிச்சாலையின் மாதாந்த வாடகை ரூபா 10,000 வரை குறைக்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கேள்விப்பத்திரம் பெறுனர் கடந்த காலத்தில் தொடர்ச்சியாகவே உரிய குத்தகைப் பணத்தை செலுத்தாமல் மேற்படி சிற்றுண்டிச்சாலையை நிருவகித்துள்ளாரென குற்றம் சாட்டப்பட்டிருந்தும் அரசு பெருந்தொகையான பணத் தொகையை இழக்கும் வகையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி சிற்றுண்டிச்சாலை தொடர்பில் பகிரங்க விலை மனுக்கோரல் மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) எதிர்வரும் காலத்தில் அதற்கேற்புடையவாறு பகிரங்க விலை மனுக்கோரல் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5755/ '14

கௌரவ புத்திக பதிரண,— நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 முதல் 2014 ஆம் ஆண்டு வரை நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மக்களின் பாவனைக்காக விநியோகித்துள்ள நீரின் அளவு தனித்தனியாக எத்தனை லீட்டர் என்பதையும்;

(ii) தற்போது குழாய் நீர் வசதியை பெற்றுக்கொள்கின்ற மொத்த பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பாவனையாளர்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையின் சதவீதமாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது குழாய் நீர் வசதிகளில்லாத, ஆயினும் நீர் வசதி தேவைப்படுகின்ற மக்கள் பற்றிய ஆய்வொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கு நீர் வழங்கத் தேவையான நீரின் லீட்டரளவு மதிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் அளவு எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நீரின் அளவைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவிலான நீர் மூலகங்கள் நாட்டினுள் உள்ளனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) கடல் நீரை சுத்திகரித்து குடி நீராக மக்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5930/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த அரசாங்கத்தின் அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் பணியாட்டொகுதிகளில் பதவி வகித்தவர்களின் தொழில்கள் 2015.01.09 ஆம் திகதி முதல் முடிவுற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அமைச்சர்களின் பணியாட்டொகுதிகளில் இருந்த அங்கத்தவர்களுக்கு அவர்களது சேவை முடிவுறுத்தப்பட்ட திகதி வரை உரித்தாகின்ற மாதாந்தச் சம்பளம், மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவு கொடுப்பனவுகள் செலுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக உரியவாறு விண்ணப்பித்த போதிலும் உரிய அனுகூலங்கள் வழங்கப்படாமைக்கும், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குரியதான குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கூட ஏற்றுக்கொள்ளப்படாமைக்குமான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அமைச்சர்களின் பணியாட்டொகுதி செயலாளர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்கு ஏற்புடையதான ஓய்வூதிய சுற்றறிக்கை இலக்கம் 06/2011 இன் படி 5 வருடகால சேவையைப் பூர்த்தி செய்துள்ள குறிப்பிட்ட செயலாளர்களின் ஓய்வூதியத்தைத் தயாரிப்பதற்காக அவர்கள் முன்னர் பணியாற்றிய அமைச்சுக்களால் சேவைக்காலம் உறுதிபடுத்தப்படுதலும் நடத்தைக் குறிப்புக்கள் வழங்கப்படுதலும் வேண்டுமென்ற போதிலும், பெரும்பாலான அமைச்சுக்கள் காலத்திற்குக் காலம் இரத்தாகியுள்ள நிலையின் கீழ் மேற்படி விடயங்கள் தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சுக்கள் குறிப்பிட்ட பொறுப்பை தவறவிடுவதற்கான காரணம் யாதென்பதையும்,

(ii) மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளை துரிதமாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2015 மே 07, வியாழக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4589/ '13

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) வெளிநாடுகளில் தொழில்புரியும் வீரர்களுக்கு ஓய்வூதியமொன்றை வழங்குவதற்காக 2010 சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காக கடைப்பிடிக்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(ii) வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகின்றபோது வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களால், தொழில் நிறுவனத்தினால் மற்றும் அரசாங்கத்தினால் பங்களிப்புச் செய்யப்படும் விதம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஓய்வூதியமாக மாதாந்தம் வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கின்ற பணத் தொகை யாதென்பதையும்;

(iv) வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் உலகின் ஏனைய நாடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4783/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தினுள்,

(i) குருணாகல் மாவட்டத்தில் காட்டு யானைகளின் தாக்குதலினால் மரணித்த ஆட்களின் எண்ணிக்கை;

(ii) மனித செயற்பாடுகளின் காரணமாக மேற்படி மாவட்டத்தினுள் உயிரிழந்த யானைகளின் எண்ணிக்கை;

(iii) நாடு முழுவதிலும் உயிரிழந்த காட்டு யானைகளின் எண்ணிக்கை

வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5272/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2416/2013 ஆம் இலக்க பொலிஸ் மாஅதிபரின் சுற்றறிக்கை மற்றும் 01/2013 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையின் கீழ் "2013 பொலிஸ் உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகள் அதிகரிப்புக்கு" உட்படாத பொலிஸ் உத்தியோகத்தர் பிரிவுகள் அல்லது உத்தியோகத்தர்கள் உள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் பிரிவுகள் அல்லது உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி சுற்றறிக்கைக்கமைய அப் பிரிவின் உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கை பொலிஸ் பொறியியற் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் பொலிஸ் உத்தியோகத்தர் வகைக்கு உட்பட மாட்டார்களா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5907/ '15

கௌரவ அருந்திக்க பர்னாந்து,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இதுவரை மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இதுவரை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மரண தண்டனை விதிக்கப்பட்டோர் மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டோரின் நன்னடத்தையைக் கவனத்திற்கொண்டு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகளைக் குறைத்தல் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) இவ்வாறு தண்டனைக் குறைப்பு நடைபெறவில்லையாயின், அவ்வாறு செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், என்?

5911/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அரச சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டு 180 நாட்களான சேவைக் காலத்தை பூர்த்திச் செய்துள்ள அனைவரினதும் சேவையை நிரந்தரமாக்குவதற்கான பிரேரணையொன்று 2015 வரவு செலவு திட்டத்தின் மூலம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதென்பதையும்;

(ii) இது தொடர்பில் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 25/2014 வெளியிடப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள "180 நாட்களான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ளவர்கள்" என்பது 2015 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மூலம் "07 ஆண்டுகள் அரச சேவையில் அமய அடிப்படையில் கடமையாற்றியவர்கள்" என மாற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி இரண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் எந்தப் பிரேரணை அமுல்படுத்தப்படும் என்பதையும்;

(iii) மேற்படி பிரேரணையின் பிரகாரமும் நிரந்தரமாக்கப்படாத தொழிலாளர்கள் சேவைத் தேவைக்கேற்ப தொடர்ந்தும் அமய அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்களா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

5918/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 சனாதிபதி தேர்தல் காலத்தில் திருகோணமலை, கண்டி வீதி, மட்டிகெளி எனும் இடத்தில் அனுமதிபெறப்பட்ட தேர்தல் நடவடிக்கைகளுக்கான அலுவலகத்திற்கு 2015.01.04 ஆம் திகதி தேர்தல் உத்தியோகத்தர்கள் என தங்களை அடையாளப்படுத்திக்கொண்ட குழுவொன்றும் வெளி ஆட்கள் சிலரும் வருகைதந்து குழப்ப நிலையை உருவாக்கி, அங்கிருந்த வீடியோ உபகரணங்களையும் அலுவலக உபகரணங்களையும் கடத்திச்சென்றுள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அச்சந்தர்ப்பத்தில் அலுவலகத்தில் இருந்தவர்கள் வருகைதந்தவர்களிடம் விடயங்களை வினவியமை தேர்தல் உத்தியோத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாக கருத்தப்படுமா என்பதையும்;

(ii) தேர்தல் காலத்தில் அனுமதிபெறப்பட்ட அலுவலகத்திலாவது தகவல்கள், திரைப்படங்கள் போன்றவற்றை காட்சிப்படுத்துதல், உரை நிகழ்த்துதல் அல்லது வேறு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதா என்பதையும்;

(iii) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள முறையற்ற விதத்தில் உட்பிரவேசித்தல், குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்துகொள்ளல் போன்ற குற்றச்சாட்டுகள், மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் நடந்துகொள்ளும் தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகாதா என்பதையும்;

(iv) மேற்படி அலுவலகத்தினுள் குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டு அங்கிருந்த உபகரணங்களை கடத்திச்சென்று அலுவலகத்தை நடாத்திச்சென்றவர்களுக்கெதிராக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக நல்லாட்சியின் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5921/ '15

கௌரவ விதுர விக்கிரமநாயக்க,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவின், வகவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் அரசாங்க காணித் துண்டொன்று சமூக சேவை நடவடிக்கைக்கென்ற அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டு தனியார் நிறுவனமொன்றினால் வணிக ரீதியிலான கழிவுப்பொருள் மீள்சுழற்சித் திட்டமொன்றுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) நீர் மூலங்களுக்காக ஒதுக்கப்பட்ட காணியொன்றில் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தின் செயற்பாடுகள் காரணமாக பிரதேச மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்கின்ற மாவக் ஓயாவின் நீர் அசுத்தமடைகின்றதென்பதையும்;

(iii) மேற்படி ஒதுக்குக் காணியை மீளக் கையளிக்குமாறு ஏற்புடைய நிறுவனத்திற்கு எழுத்து மூலமாக அறிவித்து அந்த அறிவித்தலின் பிரகாரம் காணியை மீளக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருப்பின், மீள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென 2013 நொவம்பர் 26 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட அப்போதைய காணி, காணி அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போது காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்திருந்தார் என்பதையும்;

(iv) இது வரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட காணியை மீள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5926/ '15

கௌரவ இந்திக்க பண்டாரநாயக்க,— நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டுவஸ்நுவர கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் மாவிஎல - கிரிமெட்டியாவ வீதியின் இரண்டாம் கட்டம், பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் நிகட்டபிட்டிய – இஹலகம வீதியின் இரண்டாம் கட்டம் மற்றும் வடுமுன்ன – மடன வீதி ஆகிய வீதிகளுக்கு காபட் இட்டு அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்திற்காக நிதி ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு மேற்படி அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(ii) தற்போது மேற்படி வீதியின் அபிவிருத்திப் பணிகள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) எனவே, கடுமையாக சீர்குலைந்த நிலையிலுள்ள மேற்படி வீதிகளில் போக்குவரத்து நடவடிக்கைகள் மிகவும் கஷ்டமானதாக மாறியுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வீதிகளின் அபிவிருத்திப் பணிகள் நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(ii) மேற்படி வீதிகளின் அபிவிருத்திப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5940/ '15

கௌரவ அனுர திஸாநாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் இலங்கை கடற்படையின் நிறைவேற்றுக் கிளைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கவனத்திற்கொள்ளப்பட்ட கல்வித் தகைமைகள் வருடாந்த ரீதியில் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டு இலங்கை கடற்படையின் நிறைவேற்றுக் கிளைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட குழுவிற்கு உரித்தான திரு. யோசித ராஜபக்ஷவின் க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த. (உ/த) தகைமைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திரு. யோசித ராஜபக்ஷ இலங்கை கடற்படையில் இணைந்த திகதி யாதென்பதையும்;

(ii) இவர் பிரித்தானிய றோயல் கடற்படை அகடமியில் பயிற்சிக்காக இணைந்துகொண்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி பாடநெறிக்கு திரு. யோசித ராஜபக்ஷவை தெரிவுசெய்துகொள்ள ஏற்புடையதாக்கிக் கொண்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iv) இவர் மேற்படி பயிற்சியை பூர்த்தி செய்த திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி பயிற்சியின் இறுதியில் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் இவர் பெற்ற பெறுபேறுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6037/ '15

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துடன் தொடர்புடைய குழுவொன்றுக்கு ஒப்பந்தமொன்றை வழங்கியமை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான முன்னாள் நிரந்தரப் பிரதிநிதி திருமதி ஷேனுகா செனெவிரத்ன அவர்களுக்கு எதிராகவும்;

(ii) ஐக்கிய ராஜ்ஜியத்துக்கான முன்னாள் உயர் ஸ்தானிகர் டாக்டர் கிறிஸ் நோனிஸ் அவர்கள் தாக்குதலுக்கு உட்பட்ட பின்னர் திருமதி செனெவிரத்னவினால் டாக்டர் நோனிசுக்கு எதிராகவும்;

சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுதல்கள் தொடர்பாக அவர் அறிவாரா?

(ஆ) (i) (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுதல் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான முன்னாள் நிரந்தரப் பிரதிநிதிகளுள் ஒருவரான திருமதி தமாரா குணநாயகத்தினால் திருமதி ஷேனுகா செனெவிரத்னவுடனான தனிப்பட்ட பிரச்சினையின் காரணமாக சுமத்தப்பட்டதென அண்மையில் வழங்கிய செவ்வியொன்றின் போது அவர் தெரிவித்தாரா என்பதையும்;

(ii) அவ்வாறு குறிப்பிடுவதற்கு அவரிடம் சாட்சிகள் இருக்கின்றதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இந்தக் குற்றச்சாட்டுதல் தொடர்பில் முறைசார் விசாரணைகள் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) இக்குற்றச்சாட்டுதல்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) பகுதி (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக திறைசேரி பிரதிநிதி களினால் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை அவர் பரிசீலித்தாரா

என்பதையும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4784/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டினுள் காட்டு யானைகளினால் ஏற்படும் மனித உயிரிழப்புக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக நாடு பூராகவும் தேவைப்பட்டுள்ள மின் வேலிகளின் (யானைகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வேலிகள்) நீளம் குறித்து அறிவீர்களா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி தேவைப்பாடு யாது என்பதையும்;

(iv) குருணாகல் மாவட்டத்துக்குத் தேவையான மின் வேலிகளின் நீளம் யாது என்பதையும்;

(v) மின் வேலிகளை அமைப்பதற்கு இந்தமுறை வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4813/ '14

கௌரவ புத்திக பதிரண,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டு தற்போது சுதந்திர வர்த்தக வலயத்தில் வாகனங்களை பொருத்தி விற்பனை செய்யும் தொழில்முயற்சியொன்றை நடத்திவரும் வ/ப வெஹிகல்ஸ் லங்கா தனியார் நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் ஒரு மாதத்தினுள் பதிவு செய்யப்படுமென மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட கடிதமொன்று கொள்வனவாளர்களுக்கு காண்பிக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) எனினும், மேற்படி நிறுவனத்தினால் விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் பதிவு செய்யப்படுவதை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நிராகரிக்கின்றதென்பதையும்;

(iii) இதனால், மேற்படி நிறுவனத்திலிருந்து மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்துள்ள பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் தமது வாகனங்களை செலுத்த முடியாது கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) வ/ப வெஹிகல்ஸ் லங்கா தனியார் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களை, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5223/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் உரிமம் பெற்ற மொத்த வங்கிகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு வங்கியினதும் சொத்துக்களின் அளவு தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வங்கியின் மூலமும் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி வங்கிகளின் மூலம் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடன்களை மீள அறவிடுவதற்கான முறையியலொன்று காணப்படுகிறதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4819/ '14

கௌரவ புத்திக பதிரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை விமானப் படையினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் விமானப் படையின் சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) இவ்வாகனங்களுக்கான எரிபொருள் அரசாங்கத்திலிருந்து பெறப்படுகின்றது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட சொகுசு வாகனங்களை சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்துவதற்கு இலங்கை விமானப் படையினதும் பாதுகாப்பு அமைச்சினதும் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி வாகனப் பாவனை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்விசாரணையின் பெறுபேறு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?